(5) அறிவிப்புகள்.

(அ) அவையுரிமைக் குழுவிற்கு தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவைக்கு ஓர் அறிவிப்பு:

ஒற்றை மாற்று வாக்குமுறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ்; அவையுரிமைக் குழுவிற்கு (Committee of privileges) 14 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க; வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 1—4—1975 ஆம் நாள், செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 1—4—1975 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 2—4—1975ஆம் நாள் புதன் கிழமை காலை 11 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது 14-க்கும் மேற்படின் 5—4—1975 ஆம் நாள் சனிக்கிழமை அன்று காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சட்டமன்றப் பேரவை குழுக்கள் கூடும் அறையில் (உறுப்பினர்கள் முன்னுள் ஓய்வு அறையில்) வாக்கெடுப்பு நடைபெறும்.

(4) அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) அவையினர் குழுவிற்கு தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, “ தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையின் 221 (1)–வது விதியின் கீழ் 1975–76ஆம் நிதியாண்டிற்கான அவையினர் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதிமூன்று உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும் ” என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

(5) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) அவையினர் குழுவிற்கு தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

ஒற்றை மாற்று வாக்குமுறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ் அவையினர் குழுவிற்கு (House Committee) 13 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள் நியமனத்